# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1303/1 - 2003 අගෝස්තු 25 වැනි සඳුදා - 2003.08.25

*1303/1 ஆம் இலக்கம் - 2003 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

10 (1) பிரிவின் கீழ் பணிப்புரைகள்

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பிரிவு 10 (1) இனால், அதில் உரித்துடையாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் செயற்பட்டு, இதனகத்து அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களின் தயாரிப்பாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையானது-

பொருளின் மீது அல்லது பொதியின் மீது அல்லது கொள்கலன் மீது அல்லது உறையின் மீது-

(அ) ஆகக் கூடுதலான சில்லறை விலைகள் குறிக்கும்படியும் ;
(ஆ) தொகுதி இலக்கத்தைக் குறித்துரைக்கும்படியும்: அத்துடன்
(இ) காலாவதியாகும் திகதியைக் குறித்துரைக்கும்படியும் கட்டளையிடுகின்றது.

இப்பணிப்புரை 2003 நவெம்பர் 01 இலிருந்து செயற்படத்தக்கதாக இருக்க வேண்டும்.

**அட்டவணை**

பொதிகளில் விற்கப்படும் இறைச்சியும், மற்றும் இறைச்சி உற்பத்திகளும்
பொதிகளில் விற்கப்படும் மீனும், மற்றும் வேறு கடலுணவுகளும்
பொதிகளில் அல்லது கொள்கலன்களில் உண்ணத்தக்க எண்ணெய்
பொதிகளில் தேயிலை
பொதிகளில் கோப்பி விதையும், மற்றும் தூளும்
சொக்லேட்கள்
சட்னிகளும், ஊறுகாய்களும், மற்றும் சோஸ்களும்
மாவாக்கப்பட்ட பால் (முழு ஆடை, குறைந்த கொழுப்பு, குழந்தை மற்றும் மோல்டட்)
கட்டிப்பால்
குழந்தை உணவுகள்
நோயாளர் உணவுகள்
பிஸ்கட்கள்
சிமெந்து
கமத்தொழில் உரம்
கம-இரசாயனங்கள்
காற்றேற்றப்பட்ட நீர்
தகரத்திலடைக்கப்பட்ட மீன்
ஐஸ்கிறீம்
பொதிகளிலும், கொள்கலன்களிலும் மிளகாய்த் தூள்
பொதிகளிலும், கொள்கலன்களிலும் கொத்தமல்லித் தூள்
பொதிகளிலும், கொள்கலன்களிலும் கறித்தூள்
பொதிகளிலும், கொள்கலன்களிலும் மிளகுத் தூள்
பொதிகளிலும், கொள்கலன்களிலும் மஞ்சள் தூள்
கட்டிடக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் தீந்தைகளும், வார்னிஷ்களும் மற்றும் கரைப்பான்களும்
கொள்கலன்களின் குடித்தன கிருமிகொல்லிகள்
பொதிகளிலும், கொள்கலன்களிலும் விற்கப்படும் மருந்துகளும், மற்றும் விற்றமின்களும்
மார்ஜரின்
வெண்ணெய்க்கட்டி
தகரத்திலடைக்கப்பட்ட பழங்கள்
பழ ரசங்களும் மற்றும் பானங்களும்
ஜாம்களும் ஜெலிகளும் மற்றும் மார்மலேட்டும்
யோக்கட்
உணவு பாதுகாப்பிகள்
இயற்கையான நொதியப் பிரித்தெடுப்பு உற்பத்திகள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளை மூலம்

ஆர். ஐ. விமலசேன,
தவிசாளர்

கொழும்பு
2003, ஓகத்து 20.

9-244


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.